**கவனிக்க.**-2022.07.01 22ஆந் திகதிய 2290 ஆம் இலக்க வர்த்தமானியின் பகுதி II (தமிழ் மொழிமூலம்) மற்றும் பகுதி III, பகுதி IV(அ) பிரசுரிக்கப் படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2291 - 2022 ජූලි මස 29 වැනි සිකුරාදා - 2022.07.29

*2291 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1199 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | 1200 |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 1198 | ஏல விற்பனைகள் | 1200 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- (i) நொத்தாரிசு (திருத்தம்) சட்டமூலம் 2022, யூலை மாதம் 15ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) அற்றோணித் தத்துவம் (திருத்தம்) சட்டமூலம் 2022, யூலை மாதம் 15ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(iii) ஆவணங்களைப் பதிவு செய்தல் (திருத்தம்) சட்டமூலம் 2022, யூலை மாதம் 15ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2022, ஓகத்து மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, ஓகத்து மாதம் 05 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1197 - B 082367 - 5,403 (2022/07)

# ஆய விற்பனையும் குத்தகையும்

## இரத்தினபுரி மாவட்டத்தில் கள்ளுத்தவறணை விற்பனை - 2023

பலாங்கொடை இல. 01 கள்ளுத்தவறணை

1. 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையுள்ள கால எல்லைக்குள் கீழ் அட்டவணையில் காணப்படும் பிரதேசத்தில் கள்ளு சில்லறைக்கு விற்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இங்கு கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்–

(i) 1982.08.20 ஆந் திகதியுடைய 207 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத்தவறணை ஏலவிற்பனை நிபந்தனைகளின்படியும்,

(ii) மதுவரிச் சட்ட நிபந்தனையில் காணப்பட்டுள்ள எல்லா மதுபான விற்பனை உத்தரவுப்பத்திரம் சம்பந்தமாக பொது நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகவும்.

2. எல்லா விலை மனுக்களையும் பிரதேச செயலகத்தில் அல்லது இலங்கை வங்கியில் அல்லது பிரதேச செயலகம் எனும் பலாங்கொடை எனும் கணக்கில் பணம் செலுத்துவதற்கான பற்றுச்சீட்டினை பெற்று 1,500.00 ரூபாவினை செலுத்தி பலாங்கொடை இல.01 கள்ளுத்தவறணை எனக் குறிப்பிட்டு பற்றுச் சீட்டை விண்ணப்பத்தில் இணைத்து அனுப்பி வைத்தல் வேண்டும்.

3. இலங்கையில் உள்ள எல்லா பிரதேச செயலகங்களிலும் அல்லது மதுவரித் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய குறிப்பிட்ட படிவத்தில் எழுதப்பட்ட விலைமனு உறையை ஒட்டி முத்திரையிட்டு, அதன் இடதுபக்க மேல் மூலையில் "பலாங்கொடை இல. 1 கள்ளுத் தவறணைக்கான விலைமனு" என்று தெளிவாகக் குறிப்பிட்டு விலைமனுத் திகதி முடிவடைய முன்பு பலாங்கொடை பிரதேச செயலகத்தின் விலைமனுப்பெட்டியில் அல்லது பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், பலாங்கொடை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் குறிப்பிட்ட காலத்திற்குள் அனுப்பி வைக்க வேண்டும்.

4. எல்லா விலைமனுக்காரர்களும் தமது சொந்தப் பெயரிலேயே விலைமனுவை சமர்ப்பிக்க வேண்டும்.

5. ஒருவருக்கு ஒரு கள்ளுத்தவறணைக்கு மேல் விலைமனு கோர முடியாது, அதே வேளை ஒருவர் சேர்ந்தும் கள்ளுத்தவறணைக்கு விலைமனு கோர முடியாது.

6. விலைமனுக்காரரால் குறிப்பிட்ட விலைமனுவின் தொகை இலக்கத்திலும் எழுத்திலும் குறிப்பிடப்பட வேண்டும். விலைமனுக்காரர் எல்லா விலைமனுக்களிலும் கையொப்பம் திகதியும் இடப்பட்டு உறுதிப்படுத்தல் வேண்டும். எல்லா விலைமனுக்களும் சாட்சியாளர் இருவரினால் கையொப்பமிட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். நிபந்தனைகளுக்குட்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

7. விலைமனுக்கோரலில் வெற்றிபெற்ற விலைமனுக்காரர் விலைமனுவை வாங்கியவராகக் கருதப்பட்டு பிரசுரிக்கப்பட்ட பின் பலாங்கொடை பிரதேச செயலகத்தின் நிபந்தனைகளில் கையொப்பமிட்டு பிரதேச செயலாளரால் குறிப்பிடப்படும் பணத்தினை செயலகத்தில் வைப்பிலிட்டு கள்ளுத்தவறணையை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

8. 2022.09.08 ஆந் திகதி மு.ப. மு. ப. 10.30 மணிவரை விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விலைமனு கோரப்பட்டு முடிவடைந்ததும் விலை மனுபெட்டி திறக்கப்படும். அச்சமயம் எல்லை விலைமனுதாரர்களும் குறிப்பிட்ட நேரத்தில் பலாங்கொடை பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

9. 2022.09.08 அன்று குறிப்பிட்ட நேரத்தில் இந்த விலை மனு பெறாவிட்டால் அது மீண்டும் 2022.10.10 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு நடைபெறும்.

10. எந்தவொரு விபரமும் காட்டாது விலை மனுவை சொந்த விருப்பின் பேரிலும் நிராகரிக்கும் உரிமை பிரதேச செயலாளருக்கு அளிக்கப்படும்.

11. 2022 ஆம் ஆண்டிற்கான தவறணை நடாத்தும் இடத்தில் இடத்தைப் பெற்றுக் கொடுக்க முடியும் என்பதனைக் கூற முடியாது.

திறமையான விண்ணப்பகாரரால் குறிப்பிடப்பட்ட பிரதேசத்தின் கட்டிடமொன்றை தேடிக்கொள்ள வேண்டும். அந்த கட்டடத்திற்காக மதுபான ஆணையாளர் அவர்களின் அனுமதியைப் பெற வேண்டும். கட்டிடத்தைக் பெற்றுக் கொடுக்க ஆணையாளர் உடன் பாடில்லை என்பதை கவனத்தில் கொள்ளவும்.

12. மாதாந்தக் கட்டணம் செலுத்திய பின் செலுத்தியதற்கான முத்திரை இடப்பட்டால் மட்டும் அனுமதிப்பத்திரத்தை குறித்த மாதத்திற்கு அனுமதிக்கப்படுவதோடு இல்லையெனில் அனுமதி பத்திரம் நிராகரிகப்பட்டதாக கருதி நடவடிக்கை எடுக்கப்படும்.

13. மேலதிக விபரங்களுக்கு பலாங்கொடை பிரதேச செயலகத்தில் கேட்டறிந்து கொள்ளலாம்.

எச்.எம்.எச்.பண்டா,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
பலாங்கொடை,
2022.07.11.

**அட்டவணை**

| *கள்ளுத்தவறணையின் பெயரும் இலக்கமும்* | *பிரிவு* | *அமைவிடம்* | *கள்ளுத் தவறணை திறக்கப்பட வேண்டிய நேரம்* | *விலைமனு ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும்* |
|---|---|---|---|---|
| இல.01 பலாங்கொடை | பலாங்கொடை நகர எல்லை | பலாங்கொடை நகரசபைக்கு உட்பட்ட பிரதேசம் | மு. ப. 10.00 மணியிலிருந்து பி. ப. 02.00 மணி வரை<br>பி. ப. 05.00 மணியிலிருந்து பி. ப. 09.00 மணிவரை | 2022.09.08 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை |

7-551

---

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 09 ஆம் பிரிவிற்கமைய பின்வரும் கம்பனி கூட்டிணைக் கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

*கம்பனியின் பெயர்:* ஈஸ்ட் வெஸ்ட் கொன்னேக்சன்ஸ் பியூட்டி என்ட் எலிகன்ஸ் சலோன் ( பிரைவேட்) லிமிடெட்
*கம்பனி இலக்கம்:* பீவீ 00226732
*பதிவு அலுவலக முகவரி :* இல.16, 3/3, பெல்கோன் கோர்ட், அமரசேகர மாவத்தை, கொழும்பு 05
*கூட்டிணைக்கப்பட்ட திகதி:* 2020.09.01

07-550

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் கீழ் “பெக்ஸ்டெக் எக்ஸ்சேஞ்ச் (பிரைவட்) லிமிட்டட்” எனும் நாமம் பின்வருமாறு ஹைபாஸ்வெப் (பிரைவட் ) லிமிட்டட் ஆக பெயர் மாற்றப்பட்டுள்ளதெனவும் அதற்குரிய சான்றிதழ் 2022, ஆனி மாதம் 16 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என்பதையும் இவ்வறிவித்தல் மூலம் பதியப்பட்டுள்ளது.

*கம்பனியின் முந்திய பெயர்:* பெக்ஸ்டெக்எக்ஸ்சேஞ்ச் (பிரைவட்) லிமிட்டட்
*கம்பனியின் இலக்கம்:* பீவீ 00219777
*பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி :* இல.21/3, செகன்ட் லேன், கடலன, மொரட்டுவ

*கம்பனியின் தற்போதைய பெயர்:* ஹைபாஸ்வெப் (பிரைவட் ) லிமிட்டட்

நிறுவனத்தின் முகாமையாளர்,
ஏசியன் கோப்பரேட் செக்கட்டரீஸ் (பீவீடீ) எல்டீடி,
கம்பனிச் செயலாளர்.

*07-622/1*

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 09(2) ஆம் பிரிவின் கீழ் "அர்வானி விலா (பீவீடீ) எல்டீடி" எனும் நாமம் பின்வருமாறு "சக்தி ஆனா விலா (பீவீடீ) எல்டீடி" ஆக பெயர் மாற்றப்பட்டுள்ளதெனவும் அதற்குரிய சான்றிதழ் 2022, ஆனி மாதம் 15 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என்பதை இவ்வறிவித்தல் மூலம் பதியப்பட்டுள்ளது.*

*கம்பனியின் முந்திய பெயர்:* அர்வானி விலா (பீவீடீ) எல்டீடி
*கம்பனியின் இலக்கம்:* பீவீ 00225629
*பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி :* இல.584/3, நீர்கொழும்பு ரோட், வத்தளை
*கம்பனியின் தற்போதைய பெயர்:* சக்தி ஆனா விலா (பீவீடீ) எல்டீடி

நிறுவனத்தின் முகாமையாளர்,
ஏசியன் கோப்பரேட் செக்கட்டரீஸ் (பீவீடீ) எல்டீடி,
கம்பனிச் செயலாளர்.

*07-622/2*

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 09(2) ஆம் பிரிவின் கீழ் "செமஜய மைக்ரோ கிரெடிட் (பீவீடீ) எல்டீடி" எனும் நாமம் பின்வருமாறு "செமஜய மைக்ரோ கெப்பிட்டல் (பீவீடீ) எல்டீடி" ஆக பெயர் மாற்றப்பட்டுள்ளதெனவும் அதற்குரிய சான்றிதழ் 2022, ஆனி மாதம் 16 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என்பதை இவ்வறிவித்தல் மூலம் பதியப்பட்டுள்ளது.*

*கம்பனியின் முந்திய பெயர்:* செமஜய மைக்ரோ கிரெடிட் (பீவீடீ) எல்டீடி
*கம்பனியின் இலக்கம்:* பீவீ 00229690
*பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி :* இல.805/3, 1 ஆம் மாடி, லேக் ரோட், மஹரகம
*கம்பனியின் தற்போதைய பெயர்:* செமஜய மைக்ரோ கெப்பிட்டல் (பீவீடீ) எல்டீடி

நிறுவனத்தின் முகாமையாளர்,
ஏசியன் கோப்பரேட் செக்கட்டரீஸ் (பீவீடீ) எல்டீடி,
கம்பனிச் செயலாளர்.

*07-622/3*

## பகிரங்க அறிவித்தல்

### அலுமெக்ஸ் பி.எல்.சி.(PV 539 PQ) அல்கோ இன்டஸ்ட்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டட் (PV72405) ஆகிய நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு

அலுமெக்ஸ் பி.எல்.சி. ( கம்பனி இல. PV 539 PQ) அல்கோ இன்டஸ்ட்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டட் (PV 72405) ஆகிய நிறுவனங்கள் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் ("சட்டம்") 242 ஆம் பிரிவு ஏற்பாடுகளுக்கு அமைய ஒரே நிறுவனமாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன என்பது மேற்படிச் சட்டத்தின் 242(3) (b) பிரிவுக்கு அமைவாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனத்தின் பெயர் அலுமெக்ஸ் பி.எல்.சி. என்பதாகும். ஒருங்கிணைப்பானது கம்பனிகள் நாயகத்தினால் ஒருங்கிணைப்புச் சான்றிதழ் வெளியிடப்படும் திகதியில் நடைமுறைக்கு வரும்.

ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனமாகிய அலுமெக்ஸ் பி.எல்.சி. யின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் சப்புகஸ்கந்த, மாகொல என்னும் முகவரியில் அமைந்திருக்கும்.

ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனங்களின் எந்தவொரு பங்குதாரரும் அல்லது கடன் வழங்குநரும் அல்லது ஒருங்கிணைக் கப்பட்ட நிறுவனங்களில் ஒன்று கடப்பாடு கொண்டுள்ள எவரேனுமொருவரும் ஒருங்கிணைப்புப் பிரேரணையின் பிரதிகளை வழமையான வியாபார நேரங்களில் இல. 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10 என்ற முகவரியில் பார்வையிடலாம்.

அலுமெக்ஸ் பி.எல்.சி., அல்கோ இன்டஸ்ட்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டட் ஆகியவற்றின் சபைகளின் கட்டளைப்படி,

ஹேலீஸ் குரூப் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்,
செயலாளர்கள்.

*400, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10,
2022, யூலை 18.*

*07-659*

## நொத்தாரிசின் அதிகாரத்தை இரத்துச் செய்தல்

இடங்கொட சதுரிகா நிஷாதினி (தே.அ.அ.இல. 825620141V) இல.566/1, மிஹிந்து மாவத்தை, மாலபே (தற்போது ஃபர்வானியா, தொகுதி 3, குவைத்) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் 2019, திசெம்பர் 08 ஆந் திகதியிட்ட மற்றும் சான்றளிக்கப்பட்ட வழங்கறிஞர் அதிகாரம் திரும்பப் பெற்று இரத்துச் செய்ய வேண்டும்.

மற்றும் சான்றளிக்கப்பட்ட கேத்மா ராஜபக்ச யாப்பா இலங்கை தூதரகத்தில் ஆலோசகர், நான் நியமித்த குவைத் நாட்டில் பல்பொல லோகு லியனகே ஷியானி பத்மகாந்தி அல்விஸ் (தே.அ.அ.இல. 608292225V) இல. 566/ 1A, மிஹிந்து மாவத்தை, மாலபே இலங்கை குடியரசில் மேற்படி வழக்கறிஞரின் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விவகாரங்களில் கலந்துகொள்வதற்காக எனது சட்டத்தரணியாக இருக்க வேண்டும்.

மேற்படி நியமிக்கப்பட்ட பல்பொல லோகு லியனகே ஸ்ரீயானி பத்மகாந்தி அல்விஸ் அவர்களால் செய்யப்பட்ட எந்தவொரு செயலுக்கும் அல்லது செயல்களுக்கும் நான் பொறுப்பாக மாட்டேன் என்பதை இதன் மூலம் உறுதியளிக்கிறேன்.

இடங்கொட சதுரிகா நிஷாதினி.

2022, யூலை 18.

07-644

---

## அற்றோணித் தத்துவத்தை இல்லாதொழித்தல்

இல. 534பீ, சீலரத்ன மாவத்தை, ஹொரணவில் வசிக்கும் சமத் தேமி பிரசாத் அபயவிக்ரம (தே.அ.அ.இல.197710500050) ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கு மற்றும் அதன் பொது மக்களுக்கு தெரிவிப்பதாவது, தெல்கந்த, நுகேகொட, பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட ஹொரண பகிரங்க நொத்தாரிசு எஸ். நிரோஷா வரந்தராகமவினால் எழுதி உறுதி செய்யப்பட்ட இல.4ஏ, வல்விட்ட, ஹொரண என்ற இடத்தில் வசிக்கும் கம்புறுப்பிட்டிய ஆரச்சிகே சுரங்கி இரேஷிகா (தே.அ.அ.இல. 788210140V) இற்கு வழங்கப்பட்டுள்ளது. 1223 மற்றும் 2018.08.09 ஆந் திகதிய அற்றோணித் தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்பட்டுள்ளதாகவும் இதன் பின்னர் மேற்படி அற்றோணி அதிகாரத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்த கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாகவும் என்னால் பொறுப்புக் கூறப்பட மாட்டாது என்பதாகும்.

சமத் தேமி பிரசாத் அபயவிக்ரம.

2018.08.09.

07-624

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், காக்காப்பள்ளி, சேமாஇரிப்புவ என்ற இடத்தை வசிப்பிடமாகக் கொண்டு Cimitero Vecchio, 9 Schio, 36015, Vicenza, Italy வாழ்விடமாகக் கொண்ட குருப்பு அப்புஹாமிலாகே சுஜானி அனுருத்திகா ஆகிய நான், என்னால் எனது சட்டபூர்வ அற்றோணி அதிகாரமுடையவராக வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்தில், பங்கதெனிய, கோட்டபிடிய, 86 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த மிஹிந்துகரசூரிய ப்ரியங்கா நாமலி பிரனாந்து (தேசிய அடையாள அட்டை இல. 707983604V) என்பவரை நியமித்து எழுதப்பட்ட மிலான், இலங்கை தூதரகம் கவுன்சிலர் மகேஷ் குணவர்தனவால் உறுதிப்படுத்தப்பட்ட 2017.05.29 ஆந் திகதியிடப்பட்ட அற்றோணி அதிகாரம் இத்தால் நீக்கப்பட்டு இரத்துச் செய்யப்பட்டு செல்லுபடியற்றதாக்கப்பட்டது என்பதையும் கூறப்பட்ட மிஹிந்துகரசூரிய ப்ரியங்கா நாமலி பிரனாந்து என்பவர் மூலம் எனது சார்பில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கை, செயல் அல்லது பரிமாற்றத்துக்கும் நான் பொறுப்பு ஏற்க மாட்டேன் என்பதையும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்துக்கும் மற்றும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

குருப்பு அப்புஹாமிலாகே சுஜானி
அனுருத்திகா.

07-610

---

## விசேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

ராஜகிரிய, மெதவெலிகட, 19 ஆம் இலக்கத்தில் வசிக்கும் புஷ்பா தம்மிகா மெண்டிஸ் விக்கிரமசிங்க (தேசிய அடையாள அட்டை இல. 807550209V) ஆகிய என்னால் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு கௌஷல்யா நில்மினி விஜேசிங்க அவர்களால் எழுதி உறுதிப்படுத்திய 1390 ஆம் இலக்க 2016, யூன் 03 ஆந் திகதிய அற்றோணி அதிகாரப் பத்திரத்தினால் எனது அற்றோணி தத்துவதாரரான ராஜகிரிய, மெதவெலிகட, கமதவத்த வீதி, 19 ஆம் இலக்கத்தில் வசிக்கும் பிரியந்த மெண்டிஸ் விக்கிரமசிங்க (தேசிய அடையாள அட்டை இல. 782240269V) என்பவரை நியமித்தேன் என்பதுடன், 2021.11.26 ஆந் திகதி முதல் அமுலாகும் வகையில் அது வலுவிழக்கச் செய்யப்பட்டு இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்துக்கும் மற்றும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது என்பதுடன் எனது அற்றோணி தத்துவதாரராகிய அவரால் இப்பொழுது முதல் செய்யப்படும் எவ்வித செயற்பாட்டிற்கும் நான் பொறுப்பாளியல்ல என இத்தால் அறியத்தரப்படுகின்றது.

புஷ்பா தம்மிகா மெண்டிஸ் விக்கிரமசிங்க.

2021.11.26.

07-623

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல.533, வெவ வீதி, பொரலஸ்கமுவவில் வசிக்கும் நளின் திலினகுமார கன்னங்கர (தே.அ.அ.இல. 542183268V) ஆகிய என்னால் இல.68/18, எகொடவத்த வீதி, பொரலஸ்கமுவவில் வசிக்கும் உடுவிதானலாகே காந்த ஶ்ரீ ஜகத் குமார உடுவிதான(தே.அ.அ.இல. 582683565V) என்பவருக்கு கொழும்பு பதிவக நொத்தாரிசு தொன் மனுவல் கே தொன் டொனல்ட் புஷ்பகுமார ஶ்ரீ ஜயவர்தனவினால் 2022, மாச்சு 19 ஆந் திகதி எழுதி உறுதி செய்யப்பட்ட இல. 4330 ஆம் அற்றோணி அதிகாரப் பத்திரத்தின் மூலம் வழங்கப்படும் அற்றோணி அதிகாரம் இத்தால் இரத்துச் செய்யப்படுவதாகவும் இன்று முதல் மேற்படி அற்றோணி அதிகாரத்தில் செல்லுபடியாதல் அமுலில் இல்லையென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் இத்தால் தெரிவித்துக் கொள்கிறேன்.

நளின் திலினகுமார கன்னங்கர.

07-651

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கந்தான, நிலவுள்ள, பென்டலியன் மாவத்தை, இல.25/2 இடப்பட்ட இடத்தில் வசிக்கும் (தே.அ.அ.இல. 196683600815) என்ற இலக்கமுடைய போருதொட்டகே ரேனுகா பிரியதர்ஷனி பர்னாந்து ஆகிய என்னால் கந்தான, நிலவுள்ள, மோலவத்தை வீதி, இல. 141/2A இடப்பட்ட இடத்தில் வசிக்கும் அதுகோரல ஆரச்சிகே ஜெரி சிரியான் அன்டன் பர்னாந்து என்பவருக்கு எனக்காக செயல்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டு கம்பஹா, பகிரங்க நொத்தாரிசு பியசிறி மொரப்பிட்டிய அவர்களால் 2010.05.02 ஆந் திகதி எழுதி உறுதிப்படுத்தப்பட்ட இல.314 இடப்பட்ட எனது சம்பந்தப்பட்ட அற்றோணித் தத்துவத்தை இன்றிலிருந்து இரத்துச் செய்யப்பட்டுள்ளதை இத்தால் அறியத்தருகின்றேன்.

இன்றிலிருந்து மேலே குறிப்பிடப்பட்ட அற்றோணித் தத்துவத்தை உபயோகப்படுத்தி செய்யப்படும் எவ்வித செயல்பாடுகளுக்கும் நான் பொறுப்புதாரி ஆக மாட்டேன் என இத்தால் அறியத்தருகிறேன்.

போருதொட்டகே ரேனுகா பிரியதர்ஷனி
பர்னாந்து.

2022.07.16.

07-665

## அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள்

### வெளிநாட்டு மதுபான விற்பனை அனுமதிப்பத்திரம் தொடர்பான விண்ணப்பம்
### கண்டி மாவட்டத்தில் தெல்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில் வெளிநாட்டு மதுபான தவறணை 2022/2023 ஆம் வருடங்களுக்கான குத்தகை விற்பனை

1982, ஒகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்கமுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள 1983 ஆம் ஆண்டு மற்றும் இதன் பிற்காலம் தொடர்பான வெளிநாட்டு மதுபான விற்பனை சட்ட திட்டங்களுக்கு அமையவும் இக்காலத்தில் செல்லுபடியாகும் அனைத்து வருமான வரி அத்தாட்சிப்பத்திரங்களுக்கும் செல்லு படியாகும் போது விற்பனைவரி சட்டதிட்டங்களுக்கு அமையவும் மதுபானம் சில்லறையாக விற்பதற்கான வரப்பிரசாதமொன்றை விலைக்கு வாங்குவதற்கான தெல்தோட்டை பிரதேச செயலாளர் மேலதிக அரசாங்க அதிபராகிய என்னால் 2022.08.26 ஆம் திகதி மு.ப. 10.30 மணி வரைக்கும் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. அனைத்து கேள்விப்பத்திரங்களும் இலங்கையில் எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ள முடியுமான பொதுவான விண்ணப்பப்படிவத்தில் தயார் செய்யப்பட வேண்டியதுடன்,

அ. கேள்வி வைப்புப்பணம் என்ற வகையில் எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் பின்வரும் துணைப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் திட்டமான கேள்விவைப்புப் பணத்தொகையை வைப்பில் இட்டு அதற்காகப் பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச் சீட்டையும்,

ஆ. கேள்விதாரர்களின் சொத்துக்கள் அவை அமைந்துள்ள பிரதேசத்தில் பிரதேச செயலாளரிடத்தில் பெற்றுக்கொண்ட சொத்துக்கள் தொடர்பான சான்றிதழ் ஒன்றை முன்வைத்தல் வேண்டும்.

3. கேள்வி மற்றும் சொத்துக்கள் உறுதிப்பத்திரம் முன்வைப்பது தொடர்பாக குறிப்பிட்ட வெளிநாட்டு மதுபான தவறணை குத்தகைக்கு விற்றல் சட்டதிட்டங்களில் அடங்கும் சட்டங்கள் ஒழுங்கு முறையாக பின்பற்றப்படல் வேண்டும் என்று கேள்வி முன்வைப்போரிடத்தில் மிகக் கடுமையாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கேள்விப்பத்திரம் பூரணப்படுத்துவதில் கேள்விதாரர் பின்வரும் தேவைகள் தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும்.

I. கேள்விப்பத்திரத்தை முழுமையாகப் பூரணப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யும் போது அங்கு குறிப்பிடப்பட்டுள்ள பணத்தை இலக்கத்தில் மட்டுமன்றி எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

II. பூரணப்படுத்தப்பட்டுள்ள கேள்வி விண்ணப்பத்தில் சாட்சியாளர்களின் கையெழுத்து இடப்பட்டிருக்க வேண்டும்.

III. மாற்றங்கள் செய்யும் அனைத்து இடங்களிலும் சொற்கள் திருத்துவதிலும் கேள்விதாரர்களின் சுருக்கக் கையொப்பமும் திகதியும் இட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். அங்கு தேவைகளுக்கு முரணாக முன்வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.

4. முறையாக முன்வைக்கப்படுகின்ற கேள்விப்பத்திரம்,

(அ). பிரதேச செயலாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டு பணம் செலுத்தப்படுகின்ற பற்றுச்சீட்டு;

(ஆ). சொத்து விபரம் தொடர்பான அத்தாட்சி.

ஆகியவற்றுடன் கடித உறையொன்றில் இட்டு முத்திரையொட்டி கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தவறணையின் இலக்கத்தையும் பெயரையும் குறிப்பிட்டு தெல்தோட்டை பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

5. குத்தகைக்காக கேள்வி ஏற்றுக்கொள்ளப்படுவது முடிவடையும் நேரம் மேலே குறிப்பிட்டுள்ள 01 ஆவது வாசகத்தில் குறிப் பிடப்பட்டுள்ளது. அந்நேரத்தில் அனைத்து கேள்விதாரர்களும் தெல்தோட்டை பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

6. திருப்தியான கேள்விப்பத்திரத்தை முன்வைத்த கேள்விதாரர் சிறப்புரிமைகளை வாங்கியவர்கள் எனப் பிரகடனப்படுத்தப் பட்ட பின் அன்றைய தினம் பி.ப. 2.30 மணிக்கு முன்பு தெல்தோட்டை பிரதேச செயலாளரால் விதிக்கப்படும் பணத்தொகையொன் றினை பிணைப்பணமாக தெல்தோட்டை பிரதேச செயலகத்தில் வைப்பிலிட்டு உரிய கள்ளுத்தவறணைகள் நிபந்தனை கொத்தில் கையொப்பமிடல் வேண்டும். இக்கொடுப்பனவை ரொக்கப்பணமாகவோ அல்லது வங்கியொன்றினால் வழங்கப்பட்ட கொடுப்பனவுக்காக எனக் குறிப்பிட்ட காசோலையொன்றினால் அல்லது இலங்கை வங்கியினாலோ வழங்கப்பட்ட பாதுகாப்புக்கான காசோலை என அழைக்கப்படும் காசோலை ஒன்றினாலோ செலுத்தப்படல் வேண்டும்.

7. கள்ளுத் தவறணைகளினாலோ வேறு வலுவுடைய அனுமதிப்பத்திரங்களை உடைய மறு வியாபார நிலையங்களினாலோ விற்பனைக்காக மொத்தமாக ( பீப்பாய் கணக்கில் ) கள்ளுக் குடிவகைகள் விநியோகிக்கப்படமாட்டாது என்பதை கவனத்தில் கொள்ளவும்.

8. பாதுகாப்பு காரணமாகவோ அரசாங்கத்தினால் பிறப்பிக்கப்படுகின்றதாலோ வேறு ஏதும் காரணங்களினாலோ வெளிநாட்டு மதுபான தவறணை தற்காலிகமாக மூடி விடுவதற்குரிய கட்டளையொன்று பிறப்பிப்பதற்கு எனக்கு ஏற்பட்டால் அவ்வாறு தவறணையை மூடிய காலம் தொடர்பாக குத்தகை வாரத்தில் சலுகை ஏற்பாடு ஏதும் செய்யப்படமாட்டாது. இல.09 இற்கு முன்னர் வெளிநாட்டு மதுபான சாலையொன்றை நடாத்திச் சென்றது தொடர்பாக அரசாங்கத்திற்கு ஏதும் ரொக்கப்பணம் கொடுக்க வேண்டியிருந்தால் கேள்வியை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர் அந்த மிகுதி ரொக்கப்பணத்தை கொடுத்து பூரணப்படுத்தப்பட வேண்டும்.

09. மேலதிக விபரங்களை இந்த அலுவலகத்தில் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

ஆத்மா திலுக்ஷி ஜயரத்ன,
பிரதேச செயலாளர்,
தெல்தோட்டை.

பிரதேச செயலகம்,
தெல்தோட்டை,
2022, யூலை 22.

**அட்டவணை**

**கண்டி மாவட்டத்தில் தெல்தோட்டை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் அனுமதி அளிக்கப்பட்ட வெளிநாட்டு மதுபான தவறணைப் பட்டியல் 2022/2023**

| தொடர் இலக்கமும் பெயரும் | பிரதேச செயலாளர் பிரிவு | தவறணை அமைக்கப்பட வேண்டிய பிரதேசம் | தவறணை திறக்கப்படும் நேரம் | கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|
| வெளிநாட்டு மதுபான சாலை | தெல்தோட்டை | தெல்தோட்டை பிரதேச செயலக பிரிவிற்குள் | மு.ப.11.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை பி.ப. 5.00 மணி முதல் பி.ப. 8.00 மணி வரை | 2022.08.26ஆந் திகதி மு.ப.10.30 வரை |

வெளிநாட்டு மதுபான தவறணையின் குத்தகை விற்பனைக்காக வைப்புப் பணமாக வைப்பிலிடப்பட வேண்டிய தொகை 1000.00 ரூபா ஆகும்.

7- 666

---

**நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கள்ளுத் தவறணைகள் வெளிநாட்டு குடிவகை தவறணைகள் குத்தகை விற்பனை - 2022-2023**

1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1983 ஆம் ஆண்டிற்கும் அதற்கு பின்னரான காலத்திலும் நடைமுறையில் உள்ளவாறான கள்ளு, வெளிநாட்டு குடிவகை தவறணைகள் உத்தரவுப் பத்திரம் சம்பந்தமாக கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய 2022-2023 ஆம் ஆண்டிற்காக குத்தகைக்குக் கொடுத்தல். இக்காலப்பகுதியில் கள்ளு, வெளிநாட்டு மதுபான வகைத் தவறணைகள் ( தானிய வகைகளைக் கொண்டு இந்நாட்டில் தயாரிக்கப்படும் குடிவகை உட்பட) தனிநபருக்காக சில்லறை விற்பனை குத்தகைக்குக் கொடுப்பதற்கான உத்தரவுப் பத்திரம் வழங்குவதற்கான கேள்விகள் 2022.09.16 ஆந் திகதி மு.ப. 10.30 வரையும் கேள்விப்பத்திரம் நுவரெலியா பிரதேச செயலாளரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2 . (அ) இத்தீவின் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெறப்படும் குறிப்பிட்ட படிவத்தில் மாத்திரம் கேள்விகள் அனுப்பப்படல் வேண்டும்.

(ஆ) அட்டவணையில் குறிப்பிட்ட தொகையை எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலாவது செலுத்தி அதன் பற்றுச் சீட்டு இணைக்கப்படல் வேண்டும்.

(இ) பிரதேச செயலாளரால் வழங்கிய கேள்விக்காரரின் அசைவற்ற ஆதனங்களின் பெறுமதிக்கான அத்தாட்சிப்பத்திரம் சமர்ப்பிக்கும்போது, கள்ளுத்தவறணைகளினதும், வெளிநாட்டுக்குடிவகை குத்தகைக்கான நிபந்தனைகளுக்குட்பட்ட வாராக கேள்விப்பத்திரதாரர் இருத்தல் வேண்டும்.

(ஈ) கேள்விப்பத்திரம் நிரப்பும் போது கேள்விப்பத்திரதாரர் கீழ்க்காணும் முக்கியத்துவங்களைக் கருத்தில் கொள்ளல் வேண்டும்.

(i) கேள்விப்பத்திரங்கள் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். கேள்வித் தொகையை இலக்கத்திலும் எழுத்திலும் குறிப்பிடல் வேண்டும்.

(ii) பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரத்தில் கையொப்பமிடும் சாட்சிகளது ஆளடையாள அட்டையின் இலக்கத்தையும் குறிப்பிடல் வேண்டும்.

(iii) கேள்விப்பத்திரத்தில் ஏதாவது திருத்தங்கள் , மாற்றங்கள் செய்யப்படின் கேள்விப்பத்திரதாரரின் முழுமையான கையொப்பத்தையும் திகதியையும் இட்டு உறுதிப்படுத்தல் வேண்டும்.

(iv) ஒவ்வொரு கேள்விப்பத்திரதாரர்களும் தமது அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஆள் அடையாள அட்டையின் பிரதியை கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேற்படி நிபந்தனைகளுக்குட்படாத பட்சத்தில் கேள்விகள் இரத்துச் செய்யப்படும்.

3. முறையாக நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரம், கேள்விப்பத்திரத்திற்கான வைப்புச் செய்யப்பட்ட பற்றுச்சீட்டு , பெறுமதிச் சான்றிதழ் ஆகியவற்றுடன் முத்திரையிடப்பட்ட உறையின் இடது பக்க மேல் மூலையில் தவறணைக்கான பெயரையும் தவறணைக்கான இலக்கத்தையும் குறிப்பிட்டு நுவரெலியா பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் கேள்விகள் சமர்ப்பிக்க வேண்டிய கால எல்லைக்குள் போடப்படல் வேண்டும். தபாலில் கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்புவோர் குறிப்பிட்ட கால எல்லை முடிவதற்குள் பதிவுத் தபால் மூலம் நுவரெலியா பிரதேச செயலாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதிக் கால எல்லை கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தருணத்தில் கேள்விப்பத்திரதாரர்கள் பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

5. எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்கவோ நிராகரிக்கவோ எனக்கு அதிகாரம் உண்டு.

6. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திரதாரர் விற்பனைத் தினத்தன்று பி.ப.2.00 மணிக்கு முன் நுவரெலியா பிரதேச செயலாளரால் தீர்மானிக்கப்பட்ட தொகையை பிணைப் பணமாக நுவரெலியா பிரதேச செயலாளருக்கு செலுத்துதல் வேண்டும். மேற்படி வைப்புப் பணம் நுவரெலியா இலங்கை வங்கியில் ஒரு வருட நிரந்தர சேமிப்புக் கணக்கில் எனது பெயரால் வைப்புச் செய்ய குத்தகையாளர் சம்மதிக்க வேண்டும். மேற்படி பிணைப் பணம் காசாக அல்லது இலங்கை வங்கி அல்லது மக்கள் வங்கியினால் கொடுக்கப்படும் பாதுகாப்பான காசோலை மூலமாக செலுத்தப்படல் வேண்டும். உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்கு தேவையான முத்திரைகள் கேள்விப்பத்திரதாரரால் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

7. நியமிக்கும் தவணைப்பணக் கட்டணம் மாதாந்தம் காசாக செலுத்துபவர் மட்டுமே, கேள்விப்பத்திரங்களை சமர்ப்பிக்கும் தகைமையுடையவராவர்.

8. கேள்விப்பத்திரம் கூட்டாகச் சமர்ப்பிக்கும் பட்சத்தில், ஒவ்வொருவருடைய பிரத்தியேக முகவரி தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

9. மேற்குறிப்பிடப்பட்ட தினத்தில் விற்பனை செய்யப்படாத தவறணைகள் 2022.10.17 ஆந் திகதி மு.ப. 10.30 மணியளவில் மீள் விற்பனை செய்யப்படும்.

10. மேற்படி தவறணைகள் குத்தகைக்கு கொடுப்பது சம்பந்தமான முடிவான தீர்மானம் என்னுடையதாகும்.

11. தவறணைகள் குத்தகை பற்றிய மேலதிக விபரங்கள் நுவரெலியா பிரதேச செயலாளர் அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

ஏ.ஏ.விதுர சம்பத்,
பிரதேச செயலாளர்,
நுவரெலியா.

பிரதேச செயலகம்,
நுவரெலியா,
2022.07.21.

**அட்டவணை**

**வெளிநாட்டு மதுபானத் தவறணைகள்**

| தவறணையின் பெயர் | தவறணையை அமைக்க வேண்டிய இடம் | கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி | கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி நேரம் | கேள்வி வைப்புப் பணம் ரூபா.ச. |
|---|---|---|---|---|
| இல. 01 நுவரெலியா | மாநகர சபை நுவரெலியா, இல. 6 பிரிவிற்குள் | 2022.09.16 | மு. ப. 10.30 மணி | 5000. 00 |

07- 670

# ஏல விற்பனைகள்

## பிரதேச அபிவிருத்தி வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான பெறுமதி மிக்க சொத்து விற்பனை

1. வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்தின் குமாரவன்னி பிரதேசத்தில், ஆனமடுவ பிரதேச செயலாளர் பிரிவு, தென்னகுரியாவ கிராமத்தில் பாடித்த பத்துவ/ பாடித்த பத்து கோரளே, தென்னகுரியாவ 656B கிராம அலுவலர் பிரிவில் "தென்னகுரியாவ" அல்லது "தம்மன்னாகம" என அழைக்கப்படும். அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் திரு. பொன் தங்கவடிவேலு அவர்களால் வரையப்பட்ட 2002, ஒற்றோபர் 18 ஆந் திகதியிடப்பட்ட 2397 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்ட காணித்துண்டு.

திரு. எஸ். மரியதாஸ் அவர்களால் 2016, மே 06 ஆந் திகதியிடப்பட்ட 2602 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

காணியின் விஸ்தீரணம்: 04ஏ.00றூ.00பே. அதிலுள்ள கட்டிடம், மரம், செடி, பழங்கள் உட்பட புத்தளம் மாவட்ட காணிப்பதிவகத்தில் J 14/79 என்ற இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்தின் குமார வன்னி பலாத்த, ஆனமடுவ பிரதேச செயலாளர் பிரிவு, ஆனமடுவ, பாடித்த பத்துவ கிராமத்தில் 656 ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவில் "பளுகஹஹேன" என அழைக்கப்படும் அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் டபிள்யூ. சீ. எம். எஸ். அபேசேகர அவர்களால் வரையப்பட்ட 1986, ஒற்றோபர் 01 ஆந் திகதியிடப்பட்ட 193/ 86 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 04 எனக் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு.

அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் திரு.எஸ். மரியதாஸ் அவர்களால் 2016யூன் 16 ஆந் திகதியிடப்பட்ட 20653 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

காணியின் விஸ்தீரணம்: 04ஏ.00றூ.15பே. அதில் அமைந்துள்ள கட்டிடம், உட்பட அனைத்தும். புத்தளம் மாவட்ட காணிப் பதிவகத்தில் J 09/ 103 என்ற இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**பிரதேச அபிவிருத்தி வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி, 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16ஆந் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணிக்கு எம்மால் பிரதேச அபிவிருத்தி வங்கியின் ஆனமடுவ கிளை வளாகத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.**

சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கடுமையான பணிப்புரைகளுக்கு அமைய COVID 19 நெறிமுறைகளைப் பின்பற்றிய வகையில் இந்த ஏலவிற்பனை நடைபெறும்.

**தீர்மான அறிவித்தலுக்கு**.-தயவு செய்து 2019, செத்தெம்பர் 12ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியைப் பார்வையிடவும்.

**ஆதனத்தைச் சென்றடைதல்**.- ஆனமடுவ நகரில் உள்ள மணிக்கூட்டு கோபுர சந்தியிலிருந்து புத்தளம் வீதியில் 100 மீற்றர் தூரதத்தில் சுதம்பாய வரை செல்லவும். அங்கிருந்து வல்பாலுவ வீதிக்கு இடதுபுறமாகத் திரும்பி மேலும் 50 மீற்றர் சென்று இடதுபுறம் பொல்வத்த வீதியில் 50 மீற்றர் சென்றால் விஜேசிங்க சைக்கிள் சேவை நிறுவனத்திற்கு முன்னால் இடப்புறமாக அமைந்துள்ள ஆதனத்தை அடையலாம்.

**கொடுப்பனவு செய்யும் முறை**: ஏலவிற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 25% (இருபத்தைந்து சதவீதம்);
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்);
(3) ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) மற்றும் அதற்குப் பொருத்தமான சகல வரிகளும்;
(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 1,500 ;
(5) விற்பனைக்கான கட்டணங்கள் மற்றும் வேறு ஏதேனும் கொடுப்பனவுகள் இருப்பின் அவையும்;
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரை வரி.

கொள்முதல் விலையின் மீதி 75% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் பிராந்திய பொது முகாமையாளர், பிரதேச அபிவிருத்தி வங்கி, வடமத்திய மாகாண அலுவலகம், இல.65/D, 4 ஆவது ஒழுங்கை, அபய பிளேஸ், அநுராதபுரம் என்னும் முகவரியில் செலுத்தப்பட வேண்டும்.

தொலைபேசி இலக்கம் : 025 222 3080, 025 222 5214.

மேலே கூறப்படும் வகையில் 30 நாட்களுக்குள் கொள்முதல் விலையில் மிகுதி செலுத்தப்படாத சந்தர்ப்பத்தில், ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ள தொகையை (25%) பறிமுதல் செய்து குறித்த சொத்தை மீண்டும் ஏலவிற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரிய சொத்து தொடர்பான காணி உறுதி மற்றும் ஏனைய விபரங்களை மேற்கூறப்பட்டுள்ள முகவரியில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

'முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது'

ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே தேசம், ஒரே
ஏலவிற்பனையாளர்
130 வருடகால மகோன்னத
சேவை.

தலைமை அலுவலகமும் காட்சியறையும் :
24, டொரிங்டன் வீதி, கண்டி.
தொலைபேசி: 081-2227593.
தொலை/பக்ஸ்: 081-2224371
மின்னஞ்சல்: schokmankandy@sltnet.lk

நகர அலுவலகம்:
6A, பெயார் பீல்ட் கார்டன், கொழும்பு 8.
தொலைபேசி: 011-2671467, 0112 671468
தொலை/பெக்ஸ்: 011-2671463
மின்னஞ்சல்: schokman@sameera1892.com
இணைய தளம்: www.sandslanka.com

07- 553

---

**செலான் வங்கி பீ. எல்.சீ.- நீர்கொழும்பு கிளை**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் நடைபெறும் ஏல விற்பனை

**பெறுமதிமிக்க இடம் ஒன்றின் பிரசித்த ஏல விற்பனை**

கொச்சிக்கடையில் பதிவு அலுவலகமொன்றினை வைத்தி ருக்கும் WV/13410 என்ற வியாபார பதிவு இலக்கத்தைக் கொண்ட P.B.S. ஸ்டீல் என்ற பெயரில் கீர்த்தி நாமம் மிகுந்த கூட்டு வியாபாரமொன்றினை செய்து கொண்டு போகும் கொச்சிக்கடையில் வசிக்கும் எமில் மனோராஜ் பெர்ணாண்டோபுள்ளே மற்றும் நயினாமடம் கிழக்கைச் சேர்ந்த குருகுலசூரிய அருண பிலசிதாஸ் கிஹான் பெர்ணாண்டோ ஆகியோர் கடப்பாடுடையவர்களாகவும்/ஈடுவைத்தவர்களாகவும் செலான் வங்கி சார்பாக பிரசித்த நொத்தாரிசு கே. சி. கொடித்துவக்குவினால் 2018.10.03 ஆந் திகதியிடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஈட்டு முறி இலக்கம் 210 இன் மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளாராதலால்,

2022 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 18 ஆந் திகதி மு.ப. 11.30 மணிக்கு செலான் வங்கி பீ.எல்.சீ யினால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்குட்பட்டு செலான் வங்கி பீ.எல். சீ , இல. 90, காலி வீதி, கொழும்பு 03 இல் உள்ள கிளை வளாகத்தில் என் மூலமாக பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

**அட்டவணை**

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்தில் மாறவில பதிவு பிரிவிற்குள், வென்னப்புவ மாநகர சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவில் நயினமடம கிழக்கு - 485 கிராம அலுவலரின் எல்லைக்குள், நெய்னாமடத்தில் அமைந்துள்ள பேருவே வத்த அல்லது கதுருகஹாவத்த என அழைக்கப் படும் மரங்கள், பயிர்ச்செய்கைகள், மண் முழுவதும் மற்றும் அத்துடனான எல்லாவற்றையும் உள்ளடக்கிய காணி, உரிமம் வெற்ற நில அளவையாளர் எஸ். எஸ். சுமித் ஏ. பெர்ணாண்டோவினால் வரையப்பட்ட 2018.07.19 ஆந் திகதியிடப்பட்ட 6785 ஆம் இலக்க வரைபடத்தில் காணித் துண்டு 1 என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டின் ஒரு றூட் மற்றும் எட்டு தசம் எட்டு மூன்று பேர்ச் (0ஏ. 1றூ. 8.83 பே.) விஸ்தீரணமான காணி.

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி**.- கொச்சிக்கடை நகரத்திலிருந்து சிலாபம் வீதியில் சுமார் 4.5 மீற்றர் தூரம் சென்று வலது பக்கத்திலுள்ள நைனாமட தேவாலயத்திற்குத் திரும்பி சுமார் 300 மீற்றர் தூரம் விக்சோப்பா தேவமாதா வீதியில் (பி.ச. தாரிடப்பட்ட வீதி) சென்றதும் இடது பக்கத்தில் இக்காணி அமைந்துள்ளது. (தேவாலயத்திற்கு பின்னால்).

**தீர்மான முடிவு அறிவித்தல்கள்**.- 2021.02.12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியையும், 2021.01.13 ஆந் திகதிய "சிலோன் டுடே", "தினமின" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்**.- உத்தேச கொள்வன வாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும் :-

